## பாதுகாப்பு திட்டமிடல்

கீழ்க்கண்ட ஆதாரவளங்களில் உங்களுக்கு துணை புரிவதற்கு தமிழ் மொழி பெயர்ப்பாளர் ஒருவரைக் கேளுங்கள்:

### முதியோர் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கான கனேடியன் நெட்ஒர்க்

*www.cnpea.ca*

வாழ்வின் பிற்பகுதியில் துஷ்பிரயோகம் மற்றும் புறக்கணிப்பு ஆகிய பிரச்சனைகள் பற்றிய தகவல்களைப் பெறுவதையும், பகிர்ந்து கொள்வதையும், இந்த இணையதளம் நோக்கமாகக் கொண்டது.

### முதியோர் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கான ஒன்டேரியோ நெட்ஒர்க்

1 (416) 916-6278 / *www.onpea.org*

### முதியோருக்கான பாதுகாப்பு தொலைபேசி

1 (866) 299-1011

துஷ்பிரயோகம் செய்யப்படும் மற்றும் அபாயத்தில் உள்ள முதியோருக்கு துணை புரிவதற்காக ஒரு அவசர உதவித் தொலைபேசி உள்ளது. 150 க்கு மேற்பட்ட மொழிகளில், நாளின் 24 மணி நேரமும், வாரத்திற்கு ஏழு நாட்களும் தகவல்கள், பாரிந்துரைகள், ஆதரவு வழங்கப்படுகின்றன.

*மறுதலிப்பு: இந்த பிரசுரமானது பொதுவான தகவல்களையே கொண்டுள்ளது. உங்களது குறிப்பிட்ட நிலைமை பற்றிய சட்டபூர்வ அறிவுரையைப் பெறுவதற்கு இது மாற்று அல்ல.*

*இந்த திட்டமானது சிட்டிசன்ஷிப் அன்ட் இமிக்ரேஷன் கனடாவினால் பெருமிதத்துடன் நிதியளிக்கப்பட்டது ஆகும்.*

Citizenship and Immigration Canada | Citoyenneté et Immigration Canada

*ஃபேமிலி சர்வீஸ் டொரோண்டோ நிறுவனமானது, டொரொண்டோ, ஒன்டேரியோவின் ரெக்ஸ்டேல் விமன்ஸ் சென்டரை, அவர்களது சமுதாயப் பங்குதாரர் ஆக ஆற்றிய பணிக்காக நன்றி தெரிவிக்க விரும்புகிறது.*

FAMILY SERVICE TORONTO
For People. For Change.

RWC



# இதை நான் முன்னரே அறிந்திருந்தால்...

## முதியோரே! உங்களது இன்னலில் இருந்து நிவாரணம் பெறுவதற்கான உதவி இருக்கிறது



*குடும்ப வன்முறையைத் தடுப்பதற்கான தகவல்கள் மற்றும் ஆதாரவளங்களை இந்த சிற்றேடு உங்களுக்கு வழங்குகிறது. இந்த பிரசுரங்கள் தமிழ் சமுதாயத்தினரால் தமிழ் சமுதாயத்திற்காக, பணிக்குழுக்கள் மற்றும் கவனக்குவிப்பு குழுக்களின் கலந்துரையாடல்கள் மூலமாகவும், ஜஸ்டிஸ் கனடாவின் இணையதளத் தகவல்கள் மூலமாகவும் உருவாக்கப்பட்டன.*

நீங்கள் கவலை உணர்வுடன் உளச்சோர்வு கொண்டுள்ளீர்களா?

நீங்கள் அனுபவித்து வருவதை யாரேனும் ஒருவரிடம் கூறுவதற்கு நீங்கள் அச்சம் கொள்கிறீர்களா?

உங்களுக்கு கவனிப்பு தருபவர்கள் அல்லது உங்கள் குழந்தைகள் உங்களுக்கு போதிய உணவு, உடை மற்றும் அத்தியாவசியப் பொருட்களை அளிக்காதிருக்கிறார்களா?

உங்களது குடும்பத்தாரால் மருத்துவ உதவி மற்றும்/அல்லது கவனிப்பு உங்களுக்கு மறுக்கப்படுகிறதா?

உங்களது குழந்தைகள் மற்றும்/அல்லது கவனிப்பு தருபவர்கள், உங்களது பணத்தை உங்களது அனுமதியில்லாமல் எடுத்துச் சென்று விடுகிறார்களா?

முதியோர் மீதான துஷ்பிரயோகம் பற்றிய முக்கிய தகவல்களை இந்த சிற்றேடு கொண்டுள்ளது. உங்களது உரிமைகளையும், கனேடியச் சட்டம் எவ்வாறு உங்களைப் பாதுகாக்கக்கூடும் என்பதையும் உதவியை எவ்வாறு நீங்கள் நாட முடியும் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள்.

முதியோர் மீதான துஷ்பிரயோகம் என்பதை “நம்பிக்கையை எதிர்பார்க்கும் ஒரு இடத்தில் எந்த உறவுமுறைக்குள்ளும் நிகழும் ஒரு தனியான, அல்லது திரும்பத் திரும்பச் செய்யப்படும் செயல், அல்லது உரிய நடவடிக்கை எடுக்காதிருப்பது, ஆகியவற்றால் முதியவர் ஒருவருக்கு தீங்கையோ அல்லது இன்னலையோ ஏற்படுத்துவது” என்று விளக்கலாம். உடல் ரீதியான, உளவியல் ரீதியான அல்லது உணர்வு ரீதியான துஷ்பிரயோகம், பாலியல் ரீதியான மற்றும் நிதி ரீதியில் துஷ்பிரயோகம் போன்ற பல்வேறு வடிவங்களை முதியோர் துஷ்பிரயோகம் எடுக்கக்கூடும். முதியோரின் உணர்வுகளை அறிந்தோ அல்லது அறியாமலோ, வாய்ச் சொல்லினாலோ, மன அளவிலோ அல்லது உடல் ரீதியாகவோ என்று பல வழிகளில் துஷ்பிரயோகம் செய்து ஒருவர் புண்படுத்தக்கூடும். முதியோர் மீதான துஷ்பிரயோகத்தை அவர்களது வீடுகளிலும் அல்லது அவர்களது நண்பர்கள் வட்டாரத்திற்குள்ளும் காணலாம்.

## உலக சுகாதார நிறுவனம்

*http://www.justice.gc.ca/eng/pi/fv-vf/about-aprop/index.html*

## துஷ்பிரயோக வடிவங்கள்

**உடல் ரீதியான துஷ்பிரயோகம்:**

- அனைத்து வீட்டுவேலைகளையும் செய்யச் சொல்லி கட்டாயப்படுத்துவது
- முரட்டுத்தனமாகப் பிடிப்பது, தள்ளி விடுவது
- ஒரு பொருளைக் கொண்டு உங்களை அடிப்பது
- கட்டாயப்படுத்தி ஒரு இடத்தில் அடைத்து வைப்பது
- மருத்துவ உதவி மற்றும்/அல்லது கவனிப்பைப் பெற முடியாமல் இருப்பது
- போதிய உணவு, உடை மற்றும் பிற அடிப்படையான அத்தியாவசியப் பொருட்கள் இல்லாதிருப்பது

**பொருளாதார ரீதியிலான மற்றும் நிதி ரீதியிலான துஷ்பிரயோகம்:**

- உங்களது விருப்பத்திற்கு மாறாக நடவடிக்கைகளை அங்கீகரிப்பது
- உங்களது பென்சன், செயல் திறனிழப்பிற்கான பணம், அல்லது பிற நிதி உதவித் தொகை எதையும் நிறுத்தி வைப்பது
- பணம் மற்றும் நகைகள் போன்ற உங்களது மதிப்பு மிக்க உடமைகளை எடுத்துச் சென்று விடுவது
- உங்களது சொத்தினை விற்கும்படி கட்டாயப்படுத்துவது
- காசோலைகளில் கையொப்பமிடவும் காசாக்கவும் கட்டாயப்படுத்துவது

**உளவியல் மற்றும் உணர்வு ரீதியிலான துஷ்பிரயோகம்:**

- குடும்பத்தில்/இல்லத்தில் இருந்து உங்களை வெளியே துரத்தப் போவதாக மிரட்டவும் அச்சுறுத்தவும் செய்தல்
- நாடுகடத்தப் போவதாக அச்சுறுத்துவது
- நீங்கள் ஒன்றுக்கும் லாயக்கற்றவர்கள் என்று கூறுவது
- வீட்டுக் காரியங்களில் உங்களைச் சேர்க்காமலிருப்பது
- கட்டாயமாக தனிமைப்படுத்துவது மற்றும் சேவைகளை நீங்கள் பெறுவதைக் கட்டுப்படுத்துவது
- குடும்பத்தில் உள்ள குழந்தைகள் உங்களை அவமரியாதை செய்ய ஊக்குவிப்பது
- குடும்பத்தில் அனைவரும் ஒன்று சேரும் நிகழ்வுகள், பயணம், திருமண நிகழ்வுகள், விருந்துகள், மற்றும் பிற சமூக நிகழ்வுகளில் இருந்து உங்களை ஒதுக்கி வைத்தல்
- உடல் திறனிழப்பைக் கேலி செய்வது
- தாய்நாட்டில் உள்ள குடும்பத்து உறுப்பினர்கள் மற்றும் அன்புக்குரியவர்களுடன் தொடர்பை ஏற்படுத்துவதற்கு மறுப்பது
- உங்களுக்குத் தெரிவிப்பதற்கு சைகைகளை உபயோகிப்பது
- ஆன்மீக ரீதியிலான துஷ்பிரயோகம் (உங்களது நம்பிக்கையின் படி நடக்க அனுமதிக்காதது அல்லது உங்களது நம்பிக்கையைக் கேலி செய்வது)

## பாதுகாப்பு திட்டமிடல்

1. நீங்கள் நம்பக்கூடிய மற்றும் அந்தரங்கத்தை வெளிப்படுத்தக் கூடிய யாரேனும் ஒருவரிடம் உங்களது கதையைக் கூறுங்கள்.
2. உங்களுக்கு உதவி தேவையானால், உதவிக்காக நீங்கள் மற்றவர்களைக் கேட்க வேண்டும்.
3. உங்களது பாதுகாப்பு சமரசம் செய்யப்பட்டு வருகிறது என்று நீங்கள் நினைத்தால்: உதவிக்கு அழையுங்கள் 911
4. கூடுதல் அறிவுரை தேவையென்றால், உங்களது நூலகம் மற்றும் சமுதாய மையத்தில் தகவல்கள் கிடைக்கின்றன.



*முதுமை ஒரு முடிவல்ல அது பிறிதொரு இளமையின் தொடக்கம்*
*இவ் இளமையை வாழ எமக்கொரு புதிய தேசம்*
*இதில் வளங்களுமுண்டு சவால்களுமுண்டு வளங்களைக் கொண்டு சவால்களை வெல்வோம்!*